**Starting time 02.54 P.M.**

## <u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>

**O.S. No. 160/2012**

Deposition of **<u>D.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. Aayisha Bee, Junior Assistant of this court, on 07.12.2021 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : சிவபெருமாள் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** : இவ்வழக்கின் 2-ம் பிரதிவாதி எனக்கு என்ன உறவு என்றால், தம்பி ஆவார். இவ்வழக்கு சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 42/12A ஆகும். நாங்கள் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் , தாவா சொத்தானது செல்லமுத்துவுக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளதால் , அதற்காக கிரையப் பத்திரமோ அல்லது வருவாய் துறை ஆவணமோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் , தாக்கல் செய்துள்ளேன் . நான் அதுபோன்ற ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. எனது தகப்பனார் தாவா சொத்தை அனுபவித்து வந்தார் என்று சொல்லியுள்ளதற்கு ஆதாரமாக , வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் , செய்துள்ளேன். தாவா சொத்தின் சர்வே

எண் 42/12 என இருந்தது என்றால், சரிதான். சர்வே எண் 42/12-ன் மொத்த விஸ்தீரணம் என்னவென்றால், 1 ஏக்கர் ஆகும். நான் சொல்வதுபோல் சர்வே எண் 42/12-ன் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் இல்லை என்றும், மொத்த விஸ்தீரணமே 19 செண்ட் என்றால், 19 செண்டிற்காகதான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது . எனது அம்மா பெயர் என்னவென்றால் , சின்னம்மாள். நான் தாக்கல் செய்துள்ள , எனது அம்மா பெயரிலுள்ள பி.வா.சா.ஆ.4 பட்டா பாஸ் புத்தகத்தில் உள்ள சொத்து எனது அம்மாவுக்கு எந்த ஆவணத்தின்படி பாத்தியப்பட்டது என்று எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் , நான் படிக்காததால் அதைபற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.4 பட்டா பாஸ் புத்தகத்தில் அரசாங்க முத்திரை எதுவும் உள்ளதா என்றால், சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு , இல்லை என்று , தெரியவில்லை என்றும் கூறினார் . பி.வா.சா.ஆ.4 பட்டா பாஸ் புத்தகத்தை எந்த வட்டாட்சியர் கொடுத்தார் என்று எதுவும் இல்லை என்றும் , வட்டாட்சியர் என்று மட்டும்தான் உள்ளது என்றால் , சரிதான். பி.வா.சா.ஆ.4 பட்டா பாஸ் புத்தகம் வழக்கிற்காக வேண்டி தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ.4 பட்டா பாஸ் புத்தகத்தின் அடிப்படையில் நாங்கள் இவ்வழக்கு சொத்தில் எந்த உரிமையும் கோர இயலாது என்றால் , சரியல்ல. முருகேச கவுண்டர் மற்றும் மொட்டையன் (எ) செல்லமுத்து என்பவர்கள் எனக்கு என்ன உறவு என்றால் , எனது

தகப்பனாரின் முதல்தாரத்து மகன்கள் ஆவார்கள் . முருகேச கவுண்டர், எனது அம்மாவுக்கும் மேற்படி மொட்டையன் (எ) செல்லமுத்துவுக்கும் 09.09.1966 அன்று ஒரு பாக பாத்திய விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்ததாக சொல்லி பி .வா.சா.ஆ.5 ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் , சரிதான். பி.வா.சா.ஆ.5 ஆவணம் இன்றைய தேதிவரையில் நடைமுறைக்கு வரவில்லை என்றால் , சரியல்ல. தாவா சொத்தின் கிழக்கில்தான் எங்களுக்கு சொத்தமான சொத்து உள்ளது என்றால் , சரியல்ல, வாதியின் சொத்து தெற்கிலும் , எங்கள் சொத்து வடக்கிலும் உள்ளது . வாதிக்கு யார் யார் சொத்துக்களை விற்றது என்றால் , சுரட்டையம்மாள், தங்கதுரை, வையாபுரி விற்பனை செய்தார்கள். சர்வே எண் 42/12-ல் மேற்படி சுரட்டையம்மாள், தங்கதுரை, வையாபுரி ஆகியோருக்கு 9-1/2 செண்ட்டும், எங்களுக்கு 9-1/2 செண்ட் சொத்தும்தான் சொந்தம் என்றால் , சரியல்ல, மொத்த சொத்தான 19 செண்டுமே எங்களுக்கு சொந்தமாகும் . சுரட்டையம்மாள், தங்கதுரை, வையாபுரி ஆகியோர்களுக்கு சொந்தமான 9-1/2 செண்ட் சொத்தை அபகரிக்க வேண்டியே பி.வா.சா.ஆ.5 விடுதலைப் பத்திரம் எழுதி வாங்கப்பட்டுள்ளது என்றால் , சரியல்ல. சர்வே எண் 42/12 க்கான அ-பதிவேட்டில் சுரட்டையம்மாள் பெயரும் இடம் பெற்றுள்ளது என்றால், சரியல்ல. தாவா சர்வே எண்ணில் மேற்படி சுரட்டையம்மாள், தங்கதுரை, வையாபுரி ஆகியோருக்கு பாத்தியப்பட்ட 9-1/2 செண்ட் சொத்தையும்,

இதர சொத்துக்களையும் வாதி பழனிக்கு 09.03.1994 அன்று கிரயம் செய்துள்ளார்கள் என்றால் , சரிதான். தாவா சொத்து முழுவதும் எங்களுக்கே சொத்தம் என்று சொல்லும் நிலையில் அதை வாதி கிரயம் பெற்றுள்ளதால் அதற்கான சட்ட நடவடிக்கை எதுவும் எடுத்தோமா என்றால் , தனியாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம். இதுநாள் வரை நாங்கள் வாதி மீது அதுபோல் எந்த வழக்கையும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. வாதி சர்வே எண் 42/12-ல் ஏக்கர் 0.9-1/2 செண்ட் சொத்தை கிரயம் பெற்று அதில் தாவா சர்வே எண் 42/12A என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் , அதுபற்றி எனக்கு தெரியாது . வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து சர்வே எண் 42/12A எனவும், எங்களுக்கு பாத்தியப்பட்ட 9-1/2 செண்ட் சொத்து சர்வே எண் 42/12B எனவும் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. வாதி பெயரில் தாவா சொத்துக்கு சர்வே எண் 42/12A என உட்பிரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து வட்டாட்சியரிடம் மனு எதுவும் கொடுத்தேனா என்றால், கொடுத்தேன். அதுபோல் மனு கொடுத்ததாக எனது பதிலுரையில் எதுவும் சொல்லவில்லை என்றால் , சரியல்ல. சர்வே எண் 42/12-ல் எங்களுக்கு 9-1/2 செண்ட் சொத்து மட்டுமே சொந்தம் என்பதால்தான் வாதியின் பெரியல் உள்ள கிரயத்தையோ , பட்டாவையோ இதுநாள் வரை ஆட்சேபிக்கவில்லை என்றால் , சரியல்ல. தாவா சொத்துக்கு வாதியின் பெயரில்

உள்ள பட்டாவை பார்த்துள்ளேனா என்றால் , பார்த்துள்ளேன். தாவா சொத்து முழுவதையும் இதுநாள் வரை வாதிதான் அனுபவித்து வருகிறார் என்றால், சரியல்ல. தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் உள்ளதற்குரிய வருவாய் துறை ஆவணங்களை வாதி தாக்கல் செய்துள்ளார் என்றும் , எனவே தாவா சொத்து எங்கள் அனுபவத்திலே இல்லை என்றால், சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக வாய்மொழி பாகம் பிரித்துக் கொண்டதாக எனது பதிலுரையில் சொல்லியுள்ளது தவறு என்றால் , சரியல்ல. தாவா சொத்து எங்கள் அனுபவத்தில் இல்லை என்றால் , சரியல்ல. நான் சொல்வதுபோல் தாவா சொத்தானது எனது தந்தைக்கோ அல்லது எனது தாயாருக்கோ பாத்தியப்பட்டதல்ல என்றால், சரியல்ல. எனவே தாவா சொத்தானது வாதியின் சுவாதீனத்தில் இதுநாள் வரை இருந்து வருவதால் வழக்கில் வாதி கோரியவாறு தீர்ப்பாக வேண்டும் என்றால் , சரியல்ல. தாவா சொத்தில் எனது தகப்பனாரின் சமாதி இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் , சரியல்ல. அவ்வாறு தாவா சர்வே எண்ணில் சமாதி இருப்பதை நிரூபிக்க வேண்டி அதை நீதிமன்ற ஆணையர், நில அளவையர் மூலம் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய மனு எதுவும் செய்தேனா என்றால் , இல்லை, ஆனால் தாவா சொத்தில்தான் சமாதி உள்ளது. எனது தகப்பனாரின் சமாதியானது புறம்போக்கு நிலத்தில்தான் உள்ளது என்றும், தாவா சொத்தில் உள்ளதாக பொய் சொல்கிறேன் என்றால் , சரியல்ல. நான்

தாக்கல் செய்துள்ள பி .வா.சா.ஆ.1 வரிசையில் உள்ள புகைபடங்கள் மற்றும் பி.வா.சா.ஆ.2 குறுந்தகடு தாவா சொத்திற்கு சம்பந்தப்பட்டதல்ல என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ.2 புகைபடம் எடுத்ததற்கான ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் , செய்துள்ளேன். தாவா சொத்தானது எங்கள் குடும்பத்தின் சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றால், சரியல்ல. தாவா சொத்தை வாதி அனுபவித்து வருவதற்கு நாங்கள்தான் 16.06.2012 அன்று இடையூறு செய்தோம் என்றும் , அதனால்தான் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் , சரியல்ல. எனவே வாதி கோரியவாறு வழக்கில் தீர்ப்பாக வேண்டும் என்றால், சரியல்ல.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

பிரதிவாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time: 03.35 P.M.

**ஒப்பம்/– ஜி.யுவராஜ்**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் மாவட்ட நீதிபதி (FAC),**
**ஆத்தூர்**